

கழக இளைஞரணி செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், மறைந்த கழக மாநில இளைஞரணி துணைச் செயலாளர், முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் அன்பில் பொய்யாமொழி அவர்களின் 24ஆம் ஆண்டு நினைவுநாளையொட்டி திருச்சி தெற்கு மாவட்டக் கழக அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்த அவரின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வில் திருச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் – அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் ஆகியோர் கலந்து கொண்டார்கள். இதில் மாவட்டக் கழகச் செயலாளர்கள் தியாகராஜன், வைரமணி, சட்ட மன்ற உறுப்பினர் கதிரவன், மாநகராட்சி மேயர் மு.அன்பழகன், மாநகரக் கழகச் செயலாளர் மதிவாணன், மாவட்ட, கழக நிர்வாகிகள் கே.என்.சேகரன், வண்ணை அரங்கநாதன், கோவிந்தராஜ், துணை மேயர் திவ்யா, மாவட்ட, மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.




திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில், மாவட்ட கழக அலுவலகத்தில், சேலத்தில் டிசம்பர் 17ஆம் தேதி நடைபெற உள்ள இளைஞரணி மாநாட்டிற்கான கவுண்ட் டவுனை தமிழ்நாடு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சரும், கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் துவக்கி வைத்தார். இந்த நிகழ்வில் பள்ளிக் கல்வித் துறை அமைச்சரும், திருச்சி தெற்கு மாவட்ட கழகச் செயலாளர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, போக்குவரத்து துறை அமைச்சர் சிவசங்கர், மாவட்ட கழகச் செயலாளர்கள் தியாகராஜன், வைரமணி, சட்டமன்ற உறுப்பினர்கள் கதிரவன், மாநகராட்சி மேயர் அன்பழகன், மாநகரச் செயலாளரும், மாநகராட்சி மண்டல குழு தலைவருமான மு. மதிவாணன், துணை மேயர் திவ்யா, தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே.என்.சேகரன், வண்ணை அரங்கநாதன், சப்தியல்லா, மாநில இளைஞரணி துணை செயலாளர் ஆனந்த் குமார், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் வெங்கடேஷ்குமார், மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் முத்து தீபக், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் பாலமுருகன், பொன்மாரி சாமிநாதன், ரவீந்திரன், தேசிங்குராஜா, விஷ்ணுவர்தன், மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர்கள் பார்த்தசாரதி, அல்லாபிச்சை, கண்ணன் மற்றும் இளைஞரணி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் திரளாக கலந்து கொண்டனர்.



# தி.மு.க. இளைஞர் அணி

## கழக இளைஞர் அணிச் செயலாளர்-மாண்புமிகு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சுற்றுப்பயண விவரம்

கழக இளைஞர் அணிச் செயலாளரும் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தஞ்சாவூர், திருவாரூர் நாகப்பட்டினம், மயிலாடுதுறை, புதுக்கோட்டை, திருச்சி, அரியலூர், பெரம்பலூர், கடலூர் ஆகிய மாவட்டங்களில் அரசு மற்றும் பல்வேறு கழக நிகழ்ச்சிகளில் பங்கேற்கவுள்ளார். அந்தப் பயண விவரம் வருமாறு.

| 29-08-2023 செவ்வாய்க்கிழமை | | |
|---|---|---|
| காலை 10.30 மணி | கமுதூர், விருத்தாசலம், கடலூர் மாவட்டம் | கடலூர் கிழக்கு & மேற்கு மாவட்ட இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டம் |
| மாலை 4.00 மணி | மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கடலூர் | பல்வேறு துறைகள் தொடர்பான ஆய்வுக் கூட்டம் |

அன்பகம், சென்னை – 18. — நாள் : 25–08–2023.

தமிழறிஞர் பெருமக்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன!

# திருவள்ளுவர் விருது உள்ளிட்ட 75 விருதுகளுக்கான விண்ணப்பங்கள்!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, ஆக. 29 - 2024 ஆம் ஆண்டுக்கான திருவள்ளுவர் விருதுக்கும், 2023 ஆம் ஆண்டுக்கான 74 விருதுகளுக்கும் தகைமையும் தொண்டறமும் பூண்ட தமிழறிஞர் பெருமக்களிடமிருந்து தமிழ்நாடு அரசு விண்ணப்பங்களை கோருகின்றன.

இது குறித்து அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு:-

பன்னூறு ஆண்டுகளாக வற்றாத படைப்புக்களைக் கொண்டு, சீரிளமையோடு இயங்கி வரும் தமிழுக்கும், தமிழ்மொழி, பண்பாட்டு வளர்ச்சிக்குத் தொண்டாற்றிடும் தமிழ்த்தாயின் திருத் தொண்டர்களுக்குத் தமிழ்நாடு அரசு பல்வேறு விருதுகளையும் சிறப்புகளையும் அளித்து, அவர்தம் தொண்டுக்கும் தமிழுக்கும் பெருமை சேர்த்து வருகின்றது நீங்கள் அறிந்த ஒன்றே.

அவ்வகையில் எதிர்வரும் 2024ஆம் ஆண்டுக்கான திருவள்ளுவர் விருதுக்கும், 2023ஆம் ஆண்டுக்கான 74 விருதுகளுக்கும் தகைமையும் தொண்டறமும் பூண்ட தமிழறிஞர் பெருமக்களிடம் இருந்து விண்ணப்பங்கள் வேண்டப்படுகின்றன.

விருதுகளின் அணிவரிசை:

1. திருவள்ளுவர் விருது, 2. மகாகவி பாரதியார் விருது, 3. பாவேந்தர் பாரதிதாசன் விருது, 4. தமிழ்த் தென்றல் திரு.வி.க. விருது 5. கி. ஆ. பெ. விசுவநாதம் விருது, 6. பெருந்தலைவர் காமராசர் விருது 7. பேரறிஞர் அண்ணா விருது தலா ஒரு நபருக்கு ரூ.2.00 இலட்சம், ஒரு சவரன் தங்கப்பதக்கம், தகுதியுரை, பொன்னாடை, 8. இலக்கிய மாமணி விருது 3 நபருக்கு ரூ.5.00 இலட்சம், ஒரு சவரன் தங்கப்பதக்கம், தகுதியுரை, பொன்னாடை.

ஆ.தமிழ்வளர்ச்சித் துறை விருதுகள்

1. தமிழ்த்தாய் விருது, 1 நபருக்கு ரூ. 5.00 இலட்சம், கேடயம், தகுதியுரை, 2. கபிலர் விருது, 3. உ.வே.சா. விருது, 4. கம்பன் விருது, 5. சொல்லின் செல்வர் விருது, 6. உமறுப்புலவர் விருது, 7. ஜி.யு. போப் விருது, 8. இளங்கோவடிகள் விருது, 9. அம்மா இலக்கிய விருது தலா ஒரு நபருக்கு ரூ.2.00 இலட்சம், தங்கப்பதக்கம், தகுதியுரை, பொன்னாடை, 10. மொழி பெயர்ப்பாளர் விருது 10. நபர்களுக்கு, 11. 'சிந்தனைச் சிற்பி' சிங்காரவேலர் விருது, 12. அயோத்திதாசர் விருது, 13. மறைமலையடிகளார் விருது, 14. அருட்பெருஞ்சோதி வள்ளலார் விருது, 15. காரைக்கால் அம்மையார் விருது, ஆகிய பெயர்களில் தலா நபருக்கும், 16.தமிழ்த்தந்தை சி.பா. ஆதித்தனார் விருது, 3 நபர்களுக்கும், ரூ.2 லட்சம், கேடயம், தகுதியுரை பொன்னாடையும், 17. தமிழ்ச் செம்மல் விருது 38 மாவட்டத்தோரும் ஒருவருக்கு தலா ரூ. 25,000/ மற்றும் தகுதியுரை என மொத்தம் 75 விருதுகள் வழங்கப்படுகின்றன.

தகைசான்ற அறிஞர் பெருமக்கள் http://awards.tn.gov.in என்ற இணைய தளத்தின் வழியாகவோ அல்லது தமிழ் வளர்ச்சி இயக்குநர், தமிழ் வளர்ச்சி இயக்ககம், தமிழ்ச்சாலை, எழும்பூர், சென்னை 600 008 என்ற முகவரிக்கு அஞ்சல் வாயிலாகவோ 15.10.2023 ஆம் நாளுக்குள் விண்ணப்பங்களை அனுப்பிட வேண்டுகின்றோம். தக்க ஆவணங்களோடு விண்ணப்பங்கள் அமைதல் விரும்பத்தக்கது. மேற்கண்ட இணையதளத்திலேயே போதுமான விளக்கங்கள் தரப்பட்டுள்ளன.

கூடுதல் விவரமறிய விரும்புவோர் 044 28190412, 044 - 28190413 ஆகிய தொலைபேசி எண்களை அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளலாம். உரிய நாளுக்குள் (15.10.2023) பெறப்படும் விண்ணப்பங்களே ஏற்றுக் கொள்ளப்படும் என்பதை அறிஞர் பெருமக்கள் நினைவிற் கொள்ள அன்புடன் வேண்டுகின்றோம்.

இவ்வாறு தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ளசெய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.


பெருநகர சென்னை மாநகராட்சி மின்துறை

த.தெ.நு.மை.ந.க.எண்.சி/2432/2023

ஒப்பந்தப்புள்ளிகள்

கீழ்கண்ட பணிகளுக்கு இரண்டு உறை முறையில் மேற்பார்வை பொறியாளர், மின்துறை பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களால் கோரப்படுகிறது.

Purchasing of toners for canon model printers available at various locations for Greater Chennai Corporation for a period of one year- க்கான ஒப்பம்.

| பணியின் மதிப்புத் தொகை | ஒப்ப முன் வைப்புத் தொகை |
|---|---|
| 1,09,82,354/- | 1,09,824/- |

ஒப்ப படிவங்கள் http://tntenders.gov.in என்ற இணையதளம் மூலம் பதிவிறக்கம் செய்யலாம். நிறைவு செய்யப்பட்ட ஒப்பப்புள்ளிகள் சமர்ப்பிக்க இறுதி நாள் மற்றும் நேரம் 21.09.2023 அன்று பிற்பகல் 3.00 மணி ஒப்பம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் 22.09.2023 அன்று பிற்பகல் 3.15 மணி

செ.ம.தொ.இ / 4780 / ஒப்பந்தப்புள்ளி / 2023 — கண்காணிப்பு பொறியாளர் / மின்சாரம்




திருவள்ளூரில், திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க. செயல்வீரர்கள் கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் கே.திராவிடபக்தன் தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்டக் கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ சிறப்புரையாற்றினார். இதில் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன், மாநில மாவட்ட நிர்வாகிகள் ஆர்.டி.இ.ஆதிசேசன், மாஸ்டர்.இ.குருநாஸ், டாக்டர்.வி.சி.ஆர்.குமரன், சி.ஜெயபாரதி, பா.உதயமலர்பாண்டியன், ப.சிட்டிபாபு, எஸ்.கே.ஆதம், வி.கிஷோர், மு.சுப்பிரமணியம், பி.இராஜேஸ்வரிஇரவீந்திரநாத், ஒன்றிய நகர நகரச் செயலாளர் சி.சு.ரவிச்சந்திரன், சுஜாதா.ராஜேந்திரன், சுஐ.ராஜேந்திரன் உட்பட, எஸ்.மகாலிங்கம், மோ.ரமேஷ், ஆர்த்திரவி, பிடி.சந்திரன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ம.கிரண் உட்பட நிர்வாகிகள் உள்ளனர்.

ஓமந்தூரார் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில்

# புதிய இரத்த சுத்திகரிப்பு மையம்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார்!

சென்னை, ஆக.29- மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (28.08.2023) சென்னை, ஓமந்தூரார் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில், எச்.ஐ.வி தொற்றால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு ஏ.ஆர்.டி (Anti Retroviral Treatment) கூட்டு மருத்துவ சிகிச்சை அளிக்கும் மையத்தை திறந்து வைத்து, ரூ.32.5 இலட்சம் செலவில், 5 இரத்த சுத்திகரிப்பு அலகுகளுடன் புதிய இரத்த சுத்திகரிப்பு மையத்தை திறந்து வைத்து, நகர்ப்புறங்களில் சிறுநீரகம் காக்கும் சீர்மிகு மருத்துவத் திட்டம் தொடங்கி வைத்தார்.

பின்னர் அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :-

### கூட்டு மருத்துவ சிகிச்சை மையம்!

ஓமந்தூரார் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில், எச்.ஐ.வி தொற்றால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு இலவச ஏ.ஆர்.டி கூட்டு மருத்துவ சிகிச்சை அளிக்கும் மையம் இன்று தொடங்கி வைக்கப்பட்டது. இந்த மையத்தின் மூலம் சுமார் 300 எச்.ஐ.வி தொற்றால் பாதிக்கப்பட்ட நபர்கள் பயனடைவார்கள். இதன் மூலம் எச்.ஐ.வி தொற்றால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு வாழ்நாள் முழுவதும் இலவசமாக ஏ.ஆர்.டி கூட்டு மருத்துவ சிகிச்சை, அவ்வப்போது ஏற்படும் உபாதைகளுக்கான சிகிச்சை, எச்.ஐ.வி தொற்று கிருமி அளவு பரிசோதனை, நோய் எதிர்ப்பு சக்தியின் அளவு பரிசோதனை ஆகிய பரிசோதனைகள் மற்றும் சிகிச்சைகள் அளிக்கப்படுகிறது.

இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் தான் முதல் முறையாக 1986 ஆம் ஆண்டு எச்.ஐ.வி தொற்று கண்டறியப்பட்டது. 1994 ஆம் ஆண்டு, இந்தியாவிலேயே முதன்முறையாக, தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம் தொடங்கப்பட்டது. 2009 ஆம் ஆண்டு, முத்தமிழ் றிஞர் கலைஞர் அவர்களின் தீவிர முயற்சியால் எச்.ஐ.வி தொற்றால் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பாதிக்கப்பட்ட சுமார் 6,786 குழந்தைகளுக்குத் தேவையான ஊட்டச்சத்து உணவு மற்றும் கல்விக்காக ரூ.25 கோடி அரசு வைப்பு நிதி மூலம் வரும் வட்டித் தொகையில் செலவிடப்பட்டு வருகிறது. தமிழகத்தில் ஆண்டு தோறும் சுமார் 30 இலட்சம் பொதுமக்களுக்கும், 12 இலட்சம் கருவுற்ற தாய்மார்களுக்கும் இலவச எச்.ஐ.வி பரிசோதனை செய்யப்பட்டு வருகிறது. தமிழகத்தில் இதுவரை 1,28,324 இலட்சம் எச்.ஐ.வி நோயாளிகளுக்கு இலவச ஏ.ஆர்.டி கூட்டு மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. இந்தியளவில் எச்.ஐ.வி பாதிப்பு 0.22% ஆக உள்ளது, தமிழ்நாட்டில் எச்.ஐ.வி பாதிப்பு 0.17 % ஆக குறைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு முழுவதும் 2,976 தொற்று கண்டறியும் நம்பிக்கை, 68 ஏ.ஆர்.டி கூட்டு மருத்துவ சிகிச்சை அளிக்கும் மையம் செயல்பட்டு வருகிறது. மேலும், தமிழகத்தில் எச்.ஐ.வி தொற்றால் பாதிக்கப்பட்ட மக்களின் நலனுக்காக, ஆண்டு தோறும் ரூ.2.41 கோடி செலவில் 34 இளைப்பாறுதல் மையம் செயல்பட்டு வருகிறது. இந்தியாவிலேயே எச்.ஐ.வி நோய் குறைந்த மாநிலமாக இன்று தமிழ்நாடு திகழ்கிறது.

### சிறுநீரகம் காக்கும் சீர்மிகு மருத்துவத் திட்டம்!

2023-24 மானியக்கோரிக்கை அறிவிப்பின்படி (அ.எண்.60), சிறுநீரக செயலிழப்பை ஆரம்ப நிலையிலேயே கண்டறியும் பரிசோதனை ரூ.2 கோடி செலவில் அனைத்து நகர்ப்புற, ஊரக ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் துணை சுகாதார நிலையங்களில் மேற்கொள்ளப்படும் என்ற திட்டம், 10.07.2023 அன்று சேலம் மாவட்டம், காடையாம்பட்டி ஊரக ஆரம்ப சுகாதார நிலையத்தில் தொடங்கி வைக்கப்பட்டது, மாநிலம் முழுவதும் அனைத்து ஊரக பகுதிகளிலும் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த திட்டம் தொடங்கிய 10.07.2023 முதல் 20.08.2023 வரை 5,09,664 பேர் ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், 83,430 பேர் துணை சுகாதார நிலையங்களிலும் என மொத்தம் 5,93,094 பேர் பயனடைந்துள்ளனர். தற்போது நகர்ப்புறங்களில் செயல்படுத்தும் வகையில் பரிசோதனைகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

### புதிய இரத்த சுத்திகரிப்பு மையம்!

2023-24 மானியக்கோரிக்கை அறிவிப்பில் (அ.எண்.58), வந்தவாசி, திட்டக்குடி, குளித்துறை, சாத்தூர் அரசு மருத்துவமனைகள் மற்றும் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் 50 இரத்த சுத்திகரிப்பு உபகரணங்கள் ரூ.3.25 கோடி செலவில் நிறுவப்படும் என்ற அறிவிக்கப்பட்டது. அதன்படி, இன்று ரூ.32.5 இலட்சம் (தலா ரூ.6.5 இலட்சம்) செலவில் 5 இரத்த சுத்திகரிப்பு அலகுகள் வழங்கப்பட்டு, ஓமந்தூரார் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் புதிய இரத்த சுத்திகரிப்பு மையம் தொடங்கி வைக்கப்பட்டது. இதன் மூலம் வாரத்திற்கு 3 நாட்கள் சுழற்சி முறையில் டயாலிசிஸ் சிகிச்சை செய்யப்பட்டு சுமார் 50 சிறுநீரக செயலிழப்பு நோயாளிகள் பயன்பெறுவார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பிறகு, ஓமந்தூரார் அரசு மருத்துவக் கல்லூரியில், ரூ.5 இலட்சம் செலவில் முதியோர் அறிவுத்திறன் மேம்பாட்டு தினப்பராமரிப்பு மையம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. மேலும், ரூ.10 இலட்சம் செலவில் காணொளி கால் போஸ்கோபி கருவி, ரூ.8 இலட்சம் மதிப்பீட்டில் யாக் லேசர் கருவி, ரூ5 இலட்சம் செலவில் Non Contact Tono Meter ஆகிய புதிய மருத்துவ உபகரணங்களுடன் லேசர் சிகிச்சை மற்றும் கண் அழுத்தநோய் பரிசோதனை மையம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. மேலும் ரூ.16 இலட்சம் மதிப்பீட்டில் மயக்க மருந்தியல் பிரிவு, ரூ.2இலட்சம் செலவில் LED OT Light ஆகிய உபகரணங்களுடன் மேம்படுத்தப்பட்ட நவீன அறுவை அரங்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது. மேலும், ரூ.7 இலட்சம் செலவில் கர்ப்பப்பை வாய் புற்றுநோய் கண்டறியும் அதிநவீன Coloscopy கருவி, ரூ.25 இலட்சம் செலவில் ரேடியோ அலைவரிசை வலி நிவாரண சிகிச்சை கருவி, ரூ.10 இலட்சம் செலவில், பிரத்யேக அல்ட்ரா சோனோ கிராம் கருவி ஆகிய வசதிகள் இம்மருத்துவக் கல்லூரியில் ஏற்படுத்தப்பட்டு, அதன்மூலம் பொதுமக்கள் பயன்பெற்று வருகின்றனர் என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்வில் தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கத் திட்ட இயக்குநர் த.ந.ஹரிஹரன், பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.டி.எஸ்.செல்வவிநாயகம், மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு. இரா.சாந்திமலர், ஓமந்தூரார் அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு.அரவி ஸ்ரீவத்சன், பெருநகர சென்னை மாநகராட்சி நகர்நல அலுவலர் மரு.ஜெகதீசன், ஓமந்தூரார் அரசு மருத்துவக் கல்லூரி ஒருங்கிணைப்பு அலுவலர் மரு.ரமேஷ், பேராசிரியர்கள், செவிலியர்கள் மற்றும் துணை அமைப்பினர் கலந்து கொண்டனர்.

# நடிகர் வடிவேலுவின் தம்பி ஜெகதீஸ்வரன் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஆக. 29– நடிகர் வடிவேலுவின் தம்பி மறைவையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு :

திரைக்கலைஞர் வடிவேலு அவர்களின் தம்பியான ஜெகதீஸ்வரன் (52) அவர்கள் உடல்நலக் குறைவின் காரணமாக உயிரிழந்தார் என்று அறிந்து வருந்துகிறேன்.

உடன்பிறந்த உற்றதுணையான தன் தம்பியை இழந்து வாடும் வடிவேலு அவர்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் இந்நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அச்செய்தியில் முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### முதலமைச்சர் அவர்கள் நடிகர் வடிவேலுவை தொலைபேசியில் தொடர்பு கொண்டு ஆறுதல்

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், நடிகர் வடிவேலுவை தொலைபேசி வாயிலாகத் தொடர்பு கொண்டு அவரது தம்பி மறைவிற்கு தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து ஆறுதல் கூறினார்.



பல்லாவரம் சட்டமன்ற தொகுதி தாம்பரம் மாநகராட்சி மண்டலம்2 உட்பட வார்டுகளில் முதலமைச்சர் அவர்களின் மருத்துவ காப்பீட்டு அட்டைகள் புதுப்பிக்கும் முகாம்கள் நடைபெற்றது. இதில் பொதுமக்கள் வருகை தந்து தங்கள் மருத்துவ அட்டைகளை புதுப்பித்துக் கொண்டார்கள். அவ்வாறு புதுப்பிக்க ஒரு அட்டைக்கு ரூபாய் 60 என மொத்தம் 8500 அட்டைகளுக்கான தொகையை பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி ஏற்று அட்டைகள் புதுப்பிக்கப்பட்டன. அவ்வாறு புதுப்பிக்கப்பட்ட அட்டைகள் 14. 15. 16. 17. ஆகிய வார்டுகளில் நேற்று பொது மக்களுக்கு மண்டல தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை தலைமையில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மங்கையர் திலகம் ராஜ்குமார் எஸ்.நெடுஞ்செழியன், டி.வி. ராஜேந்திரன், கோ.ஜானகிராமன், வட்டக் கழக செயலாளர் எம்.அந்தோணி டி.எச்.பிரான்சிஸ் பால், பகுதி கழக நிர்வாகிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.